REG. NO. M. 2997.

தனிப்பிரதி அணா 1

RÉPUBLIQUE FRANÇAISE

LIBERTÉ.—ÉGALITÉ.—FRATERNITÉ.

ஆசிரியர்:
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

LE RÉDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI.
Tamil Pandit
Jaffna
CEYLON.

PULSATE ET APERIETUR VOBIS

VITTAGAM

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

விக்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOU AYER
MADAM, NO. 2,
Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.
குறள்.

காரியாலயம் :—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெம்பர் 2,
புதுவை.

VOL. II. புதுவை, பவ ஹெ மாசி மீ ந உ (14—2—35) NO. 12.

திருவாய்மொழி.

பூநிலாயவைந்துமாய்ப் புனற்கண்நின்றநான்குமாய்
தீநிலாயமூன்றுமாய்ச் சிறந்தகாலிரண்டுமாய்
மீநிலாயதோன்றுமாகி வேறுவேறுதன்மையாய்
நீநிலாயவண்ண! நின்னையார்நினைக்கவல்லரே.

ஆறுமாறுமாறுமா யோரைந்துமைந்துமைந்துமாய்
ஏறுசீரிரண்டுமூன்று மேழுமாறுமேட்டுமாய்
வேறுவேறுஞானமாகி மெய்யினூடுபோய்யுமாய்
ஊறுரோடோசையாயவைந்து மாயஆயமாயனே.

ஐந்துமைந்துமைந்துமாகி யல்லவற்றுளாயுமாய்
ஐந்துமூன்றுமொன்றுமாகி நின்றவாதிதேவனே
ஐந்துமைந்துமைந்துமாகி யந்தரத்தினைந்துநின்று
ஐந்துமைந்துமாயநின்னை யாவர்காணவல்லரே.

மூன்றுமுப்பதாறிலே டோரைந்துமைந்துமைந்துமாய்
மூன்றுமூர்த்தியாகிமூன்றுமூன்று மூன்றுமூன்றுமாய்
தோன்றுசோதிமூன்றுமாய்த் துளக்கமில்விளக்கமாய்
என்றெனுவியுள்புகுந்த தென்கோலோவெம்மீசனே.

நின்றியங்குமொன்றலா வுருக்கடோறும்ஆவியாய்
ஒன்றியுள்கலந்துநின்ற நின்னதன்மையின்னதென்று
என்றும்யார்க்குமெண்ணிறந்தஆதியாய்நின்னுந்திவாய்
அன்றுநான்முகன்பயந்த வாதிதேவனல்லையே.

நாகமேந்துமேருவெற்பை நாகமேந்துமண்ணினை
நாகமேந்துமாகமாக மாகமேந்துவார்புனல்
மாகமேந்துமங்குல்தீயோர் வாழ்வைவைந்துமைந்துகாத்து
ஏகமேந்திநின்றநீர்மை நின்கணீயன்றதே.

ஓ

திருவருள்துணை.

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானெடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றுன்வந்து முந்துமினே.

[திருவாசகம்]

வித்தகம்

புதுவை,

பவ ஹெ மாசி மீ 3 ஒ

இருவினை ஒப்பு.

பேரின்ப லாபம் பெறுதற்கு—வீடடைதற்கு இருவினை ஒப்பு இன்றியமையாதது என்பது வேத உண்மை. இதன் பெட்பு "வித்தகம்" 1ம் தொகுதியில் வெளிவந்த கட்டுரைகள் சிலவற்றில் சுருங்க உரைக்கப் பட்டது; ஈண்டு ஒரு சிறிது விளக்க முற உரைக்கப்படுகின்றது. இருவினை ஒப்பு என்றால் நல்வினை தீவினைகளால் வரும் இன்ப துன்பங்களில் விருப்பு வெறுப்புக்கள் இன்றிச் ம புத்தி பண்ணிக் கொண்டிருத்தல் எனக் கூறி அமைவார் பலர். பெரியதோர் பாதக வினையும் பெரியதோர் புண்ணிய வினையும் பக்குவம் அடைந்து பலன் கொடுக்கப் போதருங்கால் அவை அநுபவமாகாது ஒன்றை மற்றொன்று மோதி இரண்டும் அழிந்து விடுவதே இருவினை ஒப்பு என்றுரும் உளர். இன்னோரன்ன கூற்றுக்கள் எல்லாம் வாய்மையான இருவினை ஒப்பின் இலக்கணத்துக்கு ஒவ்வோர் ஆற்றால் அங்கமாகி அமைவனவே யன்றி அதன் உண்மையைப் பூரணமாய் விளக்குவன ஆகா. வாய்மையான இருவினை ஒப்பு அமையப் பெறுத இடத்து இன்ப துன்பங்களில் விருப்பு வெறுப்பு அற்று இருத்தல்—சம புத்தி பண்ணுதல் என்பது வாய்ப் பேச்சே ஆகும். குரு அருளால் மதி வினையாகிய புது வினைகளைப் புரியும் போது பழ வினையாகிய விதி வினைகள் அவற்றோடு மோதுண்டு அழிந்து ஒழிதலே இருவினை சமம் பெறுதற்கு இன்றியமையாததாகும். இவ்வாறு விதி வினையாகிய பழ வினை மதி வினையாகிய புது வினையால் வெல்லப் பட்டுப் பூர்வமும் உத்தரமும் சமப் படவேண்டும்.

குறள்.

ஊழையு முப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்று பவர்.

(ஷ 62ம்—அதி. ஆள்வினையுடைமை செ. 10)

என்பது தேவர் வாக்கு.

ஊழாகிய விதி வினையால் வரும் துன்பங்களால் இளைப்புற்றுச் சோம்பாது முயன்று மதி வினையாகிய புது வினை புரிவோர் அவ் விதி வினையையும் புறங் காண்பர்—வெல்லுவர் என்பது இதன் பொருளாகும். புது வினையாகிய மதி வினையால் பழ வினையாகிய விதி வினை வலி குறைந்து—நிறை குறைந்து அதனால் அதன் பெட்பு திரிந்து—பூர்வமும் உத்தரமும் சமம் பெற நிற்றலே வெல்லுதல் என்பதனால் போந்த பொருளாகும். உடலுயிர் இருவினை சொரூபம் என்பது வேத உண்மை. வினைகள் சமப் பட்டபோது இருவினை சொரூபமாகிய உடலுயிர் இயக்கங்கள் சமம் பெறும். இவ்வாறு உடலுயிர் இயக்கங்கள் சமம் பெறுதலே—இரண்டின் அசைவு நிறை சமம் பெறுதலே இருவினை ஒப்பு என அறிதல் வேண்டும்.

"ஊச லாட்டம்இவ் உடலுயி ராயின்
இருவினை அறுத்து....."

என்னும் மணிவாசக சுருதியின் உண்மைப் பொருள் இதுவே யாம். உடல் உயிர் சமம் பெறுதல் என்பதே பூவும் நீரும் ஒரு புறமாகவும் காலும் வானும் ஒரு புறமாகவும் அமைதலும் ஆம். பிராணன் அபானன் என்பன அமலமடைந்து சமப்படுதலால் நடுவே உள்ள சிவம் என்னும் அமல அக்கினி ஆதிக்கம் பெறுதல் என்பதும் இதுவே ஆம். பிராண அபான நிரோதமே இந்திரிய நிரோதமும் ஆம். இத்தன்மை கைகூடப் பெறுவதால், இரு வினையின் ஏற்றத் தாழ்ச்சியால் உளவாகும் அசுத்தமான—நிறை முறையற்ற ஊசலாட்டமானது, சுத்தமான நிறை முறையோடு கூடிய—அசையாமல் நிறையோடு அசைவதாகிய விமலமான பொன்னூசலாட்டமாக மாற்ற மடையும். அசுத்தமான நிறை முறை இல்லாத ஊசலாட்டம் என்னும் அவச்சலனம் மலமாகிய அசுத்தம் மலிந்த சரீரத்துக்கு உரியது. ஆதலால் விமலம் பெறுத அசுத்த தநுவுடையோர் இருவினை ஒப்பு வாய்க்கப் பெற்றார் என்பது பொருந்தாப் பொய்யுரையே யாகும். மலம் அசுத்தம் நீங்குதலால் விமலமான—நிறையோடு கூடிய பொன்னூசலாட்டம் என்பது பொன்னுகமாறிய—விமல தேகமாகிய ரசஷக தேகத்துக்கு—இடப தேகத்துக்கு உரியது. பொன்னூச லாட்டமாகிய இப் பெற்றி கைகூட வேண்டும் என்னும் உண்மையே "பொன்னூசலாடாமோ" என்னும் பரிபாஷையால் வித்தகச் சித்தர் பெருமானுகிய மணிவாசகப் பிரபுவால் அருளிச் செய்யப் பட்டது.

திருவாசகம்.

சிரார் பவளங்கான் முத்தம் கயிறுக
ளாரும் பொற்பலகை ஏறி யினிதமர்ந்து
நாரா யணனறியா நாண்மலர்த்தா ளுடி
[யேற்(கு)
ஊராகத் தந்தருளு முத்தர கோசமங்கை
ஆரா வமுதி னருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச
லாடாமோ.

(ஷை திருப்பொன்னூசல் செ. 1)

"பவளம் கால்" என்பது இருவினை ஒப்பு மல பரிபாகம் வாய்ந்த விமல தநுவில் பதிந்த அருட் சத்தியை உணர்த்தி நின்றது. "பளிங்கில் பவளம் பதித்தான் பதியே" என்பது திருமந்திரம். (1ம்—தந் உபதேசம் செ. 2) சத்தி பதிந்த போது அருள் என்னும் தத்துவம் மூனைத்துக் கால் கொண்டது. அப்பில் இருக்கும் உப்பு என்னும் சிவத்தில் அடங்கியிருந்து—அக்கினியில் சூடு போல அபின்னமாகக் கலந்திருந்து விரிதற்கு—விரிந்து வியாபித்தற்குக் கால் கொண்டது என்க. ஞான சத்தி வடிவமாக உடல் அணு அணுவாக விளைவேறும் பெற்றி இதுவே ஆம். பளிங்கு என்பது அன்பு என்னும் அப்பு தத்துவத்தை உணர்த்தி நின்றது. முத்தம் கயிறுக என்பது விமலமான மனத்தை—தூய உள்ளத்தை உணர்த்தி நின்றது. "போற்பலகை" என்பது பொன் மயமான விமல தேகத்தை உணர்த்தி நின்றது. இந்திரிய நிரோதம் பெற்ற உடலம் இதுவே. களிம்பு நீங்கிய இந்திரியம் என்னும் தாது—தாது என்னும் செம்பொன் பெற வேண்டிய நிறையைப் பெற்று உறையப் பெற்ற உடலமே இருவினை ஒப்பு வாய்ந்த விமல தேகம் என்க.

"விந்து அடங்க விளையும் சிவோகமே" என்றனர் திருமூலர். உணக்கு இலாத—வற்றுத விந்து என்னும் வித்தானது உரிய சாதகங்களால் உணங்கி—வற்றி, உடலை விட்டுப் பிரிதலால் மேல் பிறவி ஏற்படாத வாறு, உடலோடு உறைந்து நித்தியத்துவம் பெறுதற்கு உரியதே இருவினை ஒப்பு என அறிதல் வேண்டும். இவ் வுண்மையையே பின் வரும் திருவாக்கால் அருளிச் செய்தார் மணிவாசகர்.

"வித்தகம்"
சந்தா நேயர்க்கு
விண்ணப்பம்.

எமது இரண்டாம் வருட "வித்தகம்" சந்தா நேயர்களுக்கு அடுத்த இலக்கம் தொடக்கமாக வி. பி. போஸ்டில் அனுப்பப்படும். ஆதலால் வி. பி. கமிஷன் முதலிய செலவு ஏற்படாவண்ணம் ஒவ்வொருவரும் தம் தம் சந்தா பணத்தைக் கீழே காணப்படும் விலாசத்துக்கு முன்னுக பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர், அல்லது மணியார்டர் மூலம் அனுப்பி வைக்கும்படி வணக்கத்தோடு வேண்டப்படுகின்றனர்.

குறிப்பு:— சிலோன் போஸ்டல் ஆர்டர் புதுவை தபாலாபீசில் எடுத்துக் கொள்ளப் படமாட்டாது.

ரா. நாகரத்தினம்.
வித்தகம் ஆபீஸ்,
புதுச்சேரி.
Fr. India.

திருவாசகம்.

பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மான் உன் நாமங்கள் பேசுவார்க்(கு)
இணக்கி லாததோர் இன்ப மேவருந் துன்
பமே துடைத்து எம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாமலென் வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து
காட்டினாய்க் கழுக்குன்றிலே.

(ஷை திருக்கழுக்குன்றப் பதிகம் செ. 1)

"நாமங்கள் பேசுதல்" என்பது ஐந்தெழுத் தருச்சனையை உணர்த்தி நின்றது. இதுவே முன்னிலைளை நிறை கண்டு பஞ்சீகரணித்தலால் அசுத்த பஞ்ச காரங்களாகிய பஞ்ச பௌதிகங்களை விமல பஞ்ச காரமாக — விமல பஞ்ச பௌதிகமாக மாற்றுதற் குரிய வாய்மையான சாதகம். "திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பாராகில்" (அப்பர் தேவாரம்) என்பதன் உண்மைப் பொருளும் இதுவேயாம். வாளா எழுத்துக்களை உச்சரித்தல் என்பது உலகியலுக்கு ஏற்ற போலிப் பொருளாகும். வாய்மையான ஐந்தெழுத் தருச்சனையாற்றான் இருவினை ஒப்பு வாய்ந்த விமல தேக முடையராய் "பெரு நோய்கள் மிக நலியப் பெயர்த்தும் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி இற" (ஷை) வாது நித்தியத்துவம் பெற முடியும் என்க. "அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டு" (திருவாசகம் திருவண்டப்பகுதி) என்பதன் பொருளும் இதுவேயாம். ஐந்தெழுத்தருச்சனையால் மலம் விமலமாகப் பெற்ற — விமலமான உடல் என்னும் வயலில் அன்பு என்னும் வித்து — சிவம் ஆக்கமுறுதலை உணர்த்தி நின்றது இது. வினை ஒத்தபோது தான் உள்ளே குரு தரிசனம் ஏற்படுவதாகும். கழுக்குன்றம் — மலங்களைக் கழுவும் அமுதம் ஊறும் இடம் — விமல பஞ்சாக்கரம் — விமல பஞ்ச பௌதிகம் "நமச் சிவாயவரை ஏறி" (திருப்புகழ்) என்பதன் பொருளும் இதுவே ஆம். இணக்கிலாத இன்பம் — சிற்றின்பம். விரிப்பிற் பெருகும். "போரார்வேற்கண் மடவீர் பொன்னூசலாடாமோ" என்பதில் மடவார் என்பது அமலம் பெறுதற் கின்றியமையாத அகில சத்திகளை —சிவைகளை உணர்த்தி நின்றது.

பின் வரும் பிரபல சுருதிப் பிரமாணம் இருவினை ஒப்பின் பண்பையும் பயனையும் நன்று புலப்படுத்துகின்றன.

திருவாசகம்.

ஊச லாட்டமிவ் உடலுயி ராயின் இருவினை
[யறுத்தென்னை
ஓசை யாலுணர் வார்க்குணர் வரியவ
னுணர்வுதந் தொளியாக்கிப்
பாச மானவை பற்றறுத் துயர்ந்ததன்
[பரம்பெருங் கருணையால்
ஆசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய அற்புத
[மறியேனே.

(ஷை அற்புதப்பத்து செ. 8)

[இங்கே ஊசலாட்டு எனப்பட்டது அசுத்த ஊசலாட்டம் — உடலுயிர் அவச்சலனமடைவது. அவச்சலனமே பிணி மூப்புச் சாக்காடுகளுக்கும் பிறவிக்கும் காரணமாகும். அவச் சலனம் இரு வினையின் ஏற்றத் தாழ்ச் சியால் உளதாவது. இருவினை அறுத் தல் என்பது இருவினையும் கெட்டுத் திரிதலே — சம முறலே உணர்த்தி நின் றது. பொன் னூசலாட்டம் இதுவே யாம். இதனால் மலம் பரிபாகமடையும். விமல தது உளதாகும். அமல நாதங் கள் கேட்கப்படும். அதனால் உணர்ச்சி தூய்மை யடையும் — சிவமாகும். சரீரம் ஊனம் நீங்கி ஒளி மயமாகும். "ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி" (ஷை பிடித்தபத்து செ.9) என்பதன் பொருளும் இதுவேயாம். உடல் இவ்வாறு ஊனம் நீங்கவே அசுத் தமான பாசங்கள் பற்றுக்கள் யாவும் ஒழியும். இதனால் சிவபுர நகர் புக்குப் பழ அடியார் கூட்டத்தைத் தரிசிக்கும் பேறு உளதாகும். "அடியார் அடிக் கூட்டிய அற்புதம் அறியேனே" என் பதன் பொருள் இதுவே என்க. "பழ அடியார் கூட்டம் அடியேன் காண ஆசைப் பட்டேன்" (ஷை ஆசைப் பத்து) எனக் கூறப்பட்டதும் அறிக. உடலுயிரே இருவினை சொரூபம் என் பதும் அவற்றின் அசைவு நிறை சமம் பெறுதலே இருவினை ஒப்பு என்பதும் அதனால் ஆம் பயனும் இச் செய்யு ளால் விளக்கமுற உரைக்கப்பட்டமை கண்டு கொள்க.

திருவாசகம்.

என்புள் ளுருக்கி இருவினையை யீடழித்துத்
தன்பங் களைந்து துவந்துவங்கள்
[தூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக்
[கொண்டன்றே.

(ஷை குலாப்பத்து செ. 3)

உரிய சாதகங்களால் என்பின் உள் உருக வேண்டும். உருகி உருகிப் பக் குவப் படவேண்டும். அ தனற்றான் இருவினையின் ஈடு அழியும். இருவினை யின் ஏற்ற இறக்கம் விடுபட்டு அவை சமம் பெறும். இருவினை ஒப்பு உண்டா கும் என்பது. இவ்வாறன்றி மனோதர் மத்தால் இருவினை ஒப்பு ஏற்படும் என்பது வாய்ப் பேச்சேயாகும் —முயற் கொம்பேயாகும். இருவினை சமம் பெறவே மலங்களால் ஆய துன் பம் களையப்படும். இதுதான் மலம் பரிபாகம் அடைந்த தென்பது—மல பரிபாகம் என்பது—மலம் விமலமான தென்பது. இதனால் தன்மை மூன் னிலே (படர்க்கை)களாகிய துவந்துவங் கள் தூய்மை அடையும். அடையவே பிணி மூப்புச் சாக்காடுகளுக்குக் கார ணமாய்ச் சரீரத்துள்ள அசுத்த நிறை கேடடையும். அதனால் அமல ஒளி ஆக்கமுறும். எம்பெருமான் உடனுள் பூரணமாகக் குடி கொள்வன். அப் புரி சடையோன் புறப்பட்டுப் போகான். அமிர்தத்துவம் என்னும் நித்தியத்து வம் உளதாகும் என்க. "அன்பின் குலாத் தில்லை ஆண்டானைக் கொண் டன்றே" என்பது "என்பர மல்லா இன்னருள்" எனப்படும் ஆதி அருளா கிய ஆகாயமும் அன்பு எனப்படும் பூமி யும் (பிருதிவி) ஒன்றுதலால் "அருள் என்னும் அன்பீன் குழவி" எனப்படும் நிறை அமைந்த அருள் என்னும் மைந் தன் பிறந்தமையை உணர்த்தி நின்றது. "அருள்" என்னும் கட்டுரையை நோக் குக. ("வித்தகம்" தொகுதி 1 இல 35) அன்போடு குலாவிய தில்லை ஆண்டா னைக் கொண்டது விமல தது என்க. இவ் விமல தத்துவே அமலமாய் அருள் வடிவாய் நித்தியத்துவம் பெறுவதா கும்—வீடாகும் என்பது. வாய்மை யான இருவினை ஒப்பின் பண்பும் பய னும் இவையே என அறிதல் வேண் டும். மூர்த்தி வழிபாடு தீர்த்த ஸ்நா னம் தல யாத்திரை முதலிய சில நடை நொடிகளால் இருவினை ஒப்பு மல பரிபாகம் எளிதின் அமைந்து விடும் என அமைவார் பலர். மூர்த்தி தலம் தீர்த்தம் முதலியன இருவினை ஒப்பு வாய்த்தற் குரிய சாதகங்களை அருளிச் செய்யும் முன்னிலை ஆசானு கிய சற்குரு நாதனை அடையச் செய் தற்கு ஒருவாற்றால் காரணமாவனவே அன்றி, அவை தாமே இருவினை ஒப்பு என் னும் அரிய பெரிய நிலையை அளித்து விடமாட்டா என்பது கண் கூடு. நம் தாயுமானப் பெருந்தகையும் இவ் வுண்மையை ஒருவாறு அறிந்தே

மூர்த்திதலந்தீர்த்தமுறையாற் றொடங்கி
[னார்க்கோர்
வார்த்தைசொலச்சற்குருவும் வாய்க்கும்
[பராபரமே

எனக் கூறுவாராயினர். குருவரு ளால் பெறப் படும் உரிய சாதகங்களா லன்றிப் பிறவாறு இருவினை ஒப்பு வாய்க்கப் பெறுதல் முயற் கொம்பே யாகும். மேலும் விரிப்பிற் பெருகும்.

இதுகாறும் கூறியவைகளால் வாய் மையான இருவினை ஒப்பின் பண்பும் அதனைப் பெறுதலின் அருமையும் அதனால் ஆம் பயனும் ஒருவாறு உண ரத்தகும்.

சுபம்.

அறிவிப்பு

கடிதர்களின்
அபிப்பிராயங்களுக்கு
அவர்களே பொறுப்பாளிகள்.

உண்மை முத்திநிலை ஆராய்ச்சி மறுப்பு.

"வித்தக"ப் பத்திராசிரியர் எழுதியது.

(தொகுதி 2. 11-ம் வாரத் தொடர்ச்சி.)

திருவாசகம்.

என்புள் ளுருக்கி யிருவினையை யீடழித்துத்
தன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய வள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே.

(ஷை குலாப்பத்து செ. 3)

ஆசான் உரைவழி நின்று நிறை முறையோடு அநுட்டிக்கப் படும் அருந்தல் பொருந்தல்களே தூல கற்பம் எனப்படுவனவாகும். கல் என்னும் பஞ்ச தநுவை விமலமாகப் பூத்து அழகு பெறச் செய்வதே கற்பம் எனப் படும். (கல்+பு+அம்) இவ் உண்மைகளை யெல்லாம் அறிவதற்கே பலகோடி சென்ம புண்ணியம் வேண்டும் என்றால் அறிந்தவாறு ஒழுகிப் பயனடைதல் எளிதின் முடிவதாகுமா? பவரோக வைத்தியனுகிய குரவன் அருளாலன்றி இயற்கை முறையான இயம நியமங்களைச் சீவர்கள் தாமாக அறிந்து அநுட்டிப்பது முடியாத காரியம். உலகில் ஒழுங்காக—பௌதிக நிறை அறிந்து உணவு கொள்பவரைக் காண்பதே மிக அரிது. அதி தீவிர பக்குவ முடையோராலன்றி ஏனையோரால் இஃது அநுட்டிக்க முடியாததே! தன் சரீர இயல்பறிந்து நீராடல், எண்ணெய்யையாவது வேறு கற்பங்கள் ஒருங்கு சேர்த்து முடிக்கப்பட்டனவற்றையாவது உரிய காலங்களில் தேய்த்து ஸ்நானம் செய்தல், இனமான உணவுகளை நிறையறிந்து உண்ணுதல் மூலிகை வர்க்கம் பாஷாண வர்க்கம் உப்பு உபரச வர்க்கங்களில் தன் சரீரத்துக்குப் பொருத்தமானவைகளை—இனமாவைகளைக் கண்டு பூத பஞ்சீகரண பேதங்களைச் (திணைமயக்கம்) சமப் படுத்த வேண்டிய நிறையையும் கண்டு அதற் கேற்பப் பக்குவஞ் செய்து உண்டு பத்தியங் கொண்டு ஒழுகி வருதல் முதலியனவே வாய்மையான இயம நியமம் என அறிதல் வேண்டும். மிக விரிவான—கடினமான அத்தியாயம் இது. இவ்வாறு ஒழுகி வரின் நிலையாமையுடைய உடலுயிருக்கு அணு அணுவாக நிலை உண்டாகும்—நிலைக்கும் தன்மை ஏற்படும். மன ஒருக்கமும் தியானமும் சிறிது சிறிதாக நிறை கொள்ளும். ஒவ் வொன்றாக அநுட்டித்து ஒவ் வொன்றுகத் தாண்டுவ தென்பது அறியாமை உடையார் வழக்கு. "அற்றவை துறந்த வெற்றியி ராக்கை" யராய் காடு மலைகளிலும் "காவிரிக்கரை" முதலிய ஆற்றங் கரைகளிலும் கல்லும் மரனும் போல அசைவற வீற்றிருக்கும் சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர்—உபசாக நிட்டையாளர் இவ்வுண்மைகளை அறிவது முடியாத காரியமே. நூல்களில் கூறப்பட்டன எல்லாம் வாய்மையான நெறி ஒன்று உள்ளது என அதனைக் குருவருளால் அறிதற்குச் சாதகமாவனவே யன்றி அவை தாமே சீவர்களை நேரே முத்தி வாயிலில் சேர்ப்பிக்க மாட்டா என்பது வெள்ளிடை மலையாம். நெறி யல்லா நெறிகளைக் கொண்டே உண்மை நெறி ஒன்று உண்டு என அதனை அறியமுடியும்.

மேலே கூறியவாறு தூல கற்பம் உண்டு பௌதிகத் தூய்மை அடைந்த ஆறிடரே — ஆறறிவு பூரணம் பெற்ற ஆறிடராகிய மானிடரே சூக்கும கல்பம் உண்ண அருகராவர். ஏனையோர் சூக்கும கல்பம் உண்ணுதற்கு ஒரு சிறிதும் அருகராகார்.

சூக்கும கல்பம் சித்துப்பொருள். இதுவே அமல ஐகார ஒலியாகிய வேதமாகும். ஆசான் அருளால் சூக்கும கற்பத்தைப் பெற்று உண்டு உண்டு பதியாகிய மதியை மதியாகிய ஆசானை ஆசானுகிய பெருந்துறையானைப் பற்ற வேண்டும். பற்றிப்படியேற்றம் பெறவேண்டும். படியேற்றம் பெறுங்கால் அஞ்ஞானமாகிய இருள் அணு அணுவாக நீறும். படிகளாகிய வரைகளைத் தன்னுள்ளே கண்டு கடந்து மேலேற வேண்டும். படி அணி வரை அங்கம் ஆதாரம் என்பன ஒரு பொருட் சொற்கள். ஏழாவது படிதான் சப்தஸ்தானம். ஒலியாகிய நாதம் தசநாதம். கிண்கிணி நாதம் வீரகண்டாமணிச் சிலம்பொலி நாதம் (தியாகர் பாதத்தில் ஒலிக்கும் நாதம்) பஞ்ச நாதம் (இதுவே பஞ்சநதம் ஐயாறு—இடுகுறித் தலம்) சங்கநாதம் என்பவைகளைக் கஷ்டப்பட்டுக் கடக்க வேண்டும். பின்வரும் பிரமாணங்கள் மெய்யடியாரால்கேட்கப்படும் நாதங்களின் இயல்பை நன்று புலப்படுத்துவனவாகும்.

திருவாசகம்.

ஞானவா ளேந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா ஏறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவச மடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோரா மாயப்படை வாராமே.

(ஷை திருப்படையெழுச்சி செ. 1)

[ஞானவாள்—வடு நீங்கிய கந்து—தூய உணர்ச்சி—ஞான நேத்திரம். நாதப் பறை—பரநாத முரசு. மானமா—வாசிக் குதிரை. மதி வெண்குடை கவித்தல் — மனமும் மதியும் ஒன்றுதல். திங்கள் சூடுதல் என்பதன் பொருள் இதுவேயாம். நீற்றுக் கவசம்—பொற் சுண்ணம்; அசுத்த பௌதிகம் செத்து நீறுதல்—விமல பௌதிகமாக மாற்ற மடைதல். வான ஊர்—ஞானாகாசம்.]

ஞானசம்பந்தர் தேவாரம்.

பறையின்னொலி சங்கின்னொலி பரங்காரவுமார
அறையும்மொலி யெங்கும்மவை அறிவாரவர்தம்மை
நிறையும் புனல்சடைமேலுடையடிகள் நின்றியூரில்
உறையும் இறையல்லதென துள்ளம்முணராதே.

(ஷை திருநின்றியூர்–பண் நட்டபாடை செ. 3)

[இச்செய்யுளால் மேலே கூறிய நாதங்களாகிய சூக்கும கல்பம் உண்பவர்கள் தூலத்துள் எம்பெருமான் அணு அணுவாக நிறைதல்–குடி புகுதல் கூறப்பட்டது.]

திருமந்திரம்.

மணிகடல் யானை வளர்குழன் மேகம்
மணிவண்டு தும்பி வளைபே ரிகையாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்க ஒண்ணுதே.

கடலொடு வேகக் களிறொடு மோசை
அடலொடு மவ்வினை யண்ட ரண்டத்துச்
சுடர்மன்னு வேணு சுரிசங்கி ஞோசை
திடமறி யோகிக்கல் லாற்றெரி யாதே.

[இங்கே "பணிந்தவர்" எனவும் "திடமறியோகி" எனவும் குறிக்கப்பட்டவர் சிவயோகிகளே யாவர். சவிகற்ப நிர்விகற் நிட்டையாளராகிய "அசட்டு யோகி" களுக்கும் வாய்மையான சிவயோகிகளுக்கும் இடையீடு அளவிடற்கு அரியது.]

ஈச னியல்பும் இமையவ ரீட்டமும்
பாச மிரங்கப் பரந்துயி ராய்நிற்கும்
ஓசை யதன்மணம் போல விவைதோர்
ஓசையு மீசன் உணரவல் லார்க்கே.

(ஷை 3ம் தந் அட்டாங்கயோகம் (தியானம்) செ 9, 10, 11)

[இவற்றால் வாய்மையான — சுத்தமான தசநாதங்களின் இயல்பும் அவை ஈசன் வடிவம் என்பதும் கூறப்பட்டன. "நாதனே நாத மிகுத்து ஓசையதானவனே" (சுந்தரர் தேவாரம்) என அருளப்பட்டதனாலும் நாதம் சிவ வடிவம் என்பது வெள்ளிடையாம்.]

ஆறங்க மாய்வரு மாமறை யோதியைக்
கூறங்க மாகக் குணம்பயில் வாரில்லை
வேறங்க மாக விளைவுசெய் தப்புறம்
பேறங்க மாகப் பெருக்குகின் றாரே.

(ஷை பாயிரம் 3வது வேதச்சிறப்பு செ. 5)

[இதனால் வாய்மையான அங்கங்களின் இயல்பு கூறப்பட்டது.]

ஆடிய காலி லசைக்கின்ற வாயுவும்
தாடித் தெழுந்த தமருக ஓசையும்
பாடி எழுகின்ற வேதாக மங்களும்
நாடியு ளுள்ளாக நான்கண்ட வாறே.

(ஷை 8ம் தந். அவத்தை பேதம் நின்மலாவத்தை செ. 14)

[இதனால் வாய்மையான வேதங்கள் ஆகமங்கள் என்பன மெய்யடியார் உடலகத்துக் காணப்படுதல் கூறப்பட்டது. பின்வரும் திருவாக்கும் இவ் உண்மையை நன்று வலியுறுத்துகின்றது.]

சுந்தரர் தேவாரம்.

அரவொலியாகமங்களறிவாரறிதோத்திரங்கள்
விரவியவேதவொலிவிண்ணெலாம்வந்தெதிர்ந்திசைப்ப
வரமலிவாணன்வந்துவழிதந்தெனக்கேறுவதோர்
சிரமலியானைதந்தான்றொடித்தான்மலைபுத்தமனே.

(ஷை திருநொடித்தான்மலை செ. 8)

[விண்—ஞானாகாசம்.]

மேலே காட்டிய பிரமாணங்களால் வாய்மையான வேதம் முதலியன மெய்யடியார் உடலகத்துக் காணப்படுவனவாகும் என்பது வெள்ளிடைமலையாம். எட்டாவது படியாகிய இடம்லலாட புருவமத்தி. இதுவே சுத்த நந்தி நாதம் ஒலிக்கும் இடமாகும். சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர்–உபாசக நிட்டையாளர் பாவனை செய்யும் சுழினைக்கும் இதற்கும் உள்ள இடையீடு அளவிடுதற்கு அரியது. முற்கூறிய இருவகை நிட்டையாளர் சுழினை என்றும் புருவமத்தி என்றும் பேசுவர்! மூக்கு நுனி என்றும் சொல்வர். இஃதும் பெரிய அறியாமையே. உபாசக நிட்டையில் இருப்பவர்க்குப் புருவமத்தியே சுழினை எனப் பாவனையாகும். இயற்கைச் சுழினை இதுவன்று. இயற்கைச் சுழினை இன்னது என்று புசுண்ட மஹர்ஷி கூறுகின்றார்.

"பாரடா புருவமத்தி எதென்றுக்கால்
பரப்பிர மானதொரு அண்டஉச்சி
.....
....."

இதனால் பெறப்படுவது யாது? துரியாதீத அதீதச் சுழினை, பிரம்ம குரு சுழினை, குரு நந்தி சுழினை, ஐம்பொறியாகிய ஐம்பூத ஆக்கச் சுழினை, ஆதி பிரணவச்

* ஸர். ஜகதீச சந்திர வஸு அவர்கள் செய்த பிரசங்கம். *

(தொகுதி 2. 7-ம் வாரத் தொடர்ச்சி.)

செடிகொடிகளின் ஸ்வலிகிதம்.

செடிகொடிகள் பெரிய ஊமைகளாயிருக்கின்றன. ஆதலால் அவைகளை நாம் கேட்கும் கேள்விகளுக்கு ஏதாவது விடைகளைக் கொடுக்கும்படி செய்யக்கூடிய யாதாயினுமொரு நிர்ப்பந்தச் சக்தியை நாம் கண்டு பிடிக்க வேண்டும்; அப்புறம் அவையிருக்கும் விடைக் குறிகள் தமக்குத் தாமே நமக்கு பொருட்படக்கூடிய ஒரு பாஷையாக மாறுவதற்குத் துணை புரியும் கருவிகளை யமைத்தல் வேண்டும். கடைசியாக அவ்வித விசித்திர பாஷையின் பொருளை நாம் அறிந்து கொள்ளப் பிரயத்தனப்பட வேண்டும். வாய் திறந்து பேசாமல் மறைந்து நிற்கும் உயிர்களின் ரஹஸியங்களை ஊடுருவிக் கண்டறியக்கூடிய கருவிகள் எவ்வளவு நுண்ணிய கருவிகளாயிருத்தல் வேண்டுமென நாமே யோசித்துப் பார்த்துக் கொள்ளலாம். முதல் முதல் அணுத்தினும் சிறிய உயிர் நிலை வஸ்துவைக் கண்டறிந்து அதன் உயிர்த் துடிப்பை அறிதல் அவசியம். பூதக் கண்ணுடியால் காணக்கூடிய வஸ்துக்களுக்கப்பால் உள்ள கண்ணுக்குத் தென்படாத வஸ்துக்களை நாடிச் செல்லுதல் வேண்டும். அதற்கென நிர்மிக்கப் பட்ட மின்சார ஊடுருவியுணர்க் கருவியைக் கொண்டு மரத்தில் மறைந்து நிற்கும் உட்பாகத்திலுள்ள பிரதிஸ்தலத்தையும் ஆராய்தல வேண்டும். செடிகொடிகளில் முக்கியாம்சங்களில் மிருகங்களிற் போன்ற ஆக்ஞா நரம்புகள் இருப்பதால் அவைகளைத் தாக்கினால் மிருகங்களைப் போலவே செடிகளும் உள்ளிழுத்துச் சுருங்கும் குணத்தை உடைத்தாயிருக்கின்றன வென்றும், உண்மையை மேற்கூறிய கருவிகளையும் இதர பல வித கருவிகளையுங் கொண்டு ரூபிக்க முடிந்தது. செடிகொடிகளும் விரிந்த நரம்புக்கூட்டங்கள் உடையன வென்றும் கண்டு பிடிக்கலாயிற்று.

சலனமில்லாது உலர்ந்த கட்டையைப் போல் தோன்றும் பட்டைகளுக்குள்ளே துடி துடித்துக் கொண்டிருக்கும் அங்கங்கள் உள்ளன; இந்தத் துடி துடிப்புதான் படபடவென்று அடித்துக் கொள்ளும் நமது இருதயத்தை யொத்தன. உயிர் துறக்கும் நெருக்கடியான ஸமயத்தில் நமக்கு ஏற்படும் மரணவஸ்தையைப் போன்ற ஒரு படபடப்பும் ஹிம்ஸையும் செடிகளுக்கும் ஏற்படுகிறது. சமீப இனங்களுக்குள் வெளிக்குத் தோற்றும் பேதங்கள் மறைந்து அற்பமான புல் பூண்டு முதல் மானிட வர்க்கம் வரைக்கும்

சுழினை, மஹா குண்டலியை அடிமை கொண்ட சுழினை, அக்குண்டலியால் சர்வ வியாபகமும் படைக்கும் சுழினை, அலி சுழினை, அப்பால் தாவி அறிதற்கு மிக அரிதாகிய அகண்டாகார அமல ஐகாரச் சுழினை, சோம சூரிய உபய சமரச அக்கினிச் சுழினை, அதீதாதீத மஹா அகண்ட நிராலம்ப நிறை சூன்ய சர்வ பரி பூரண சகள நிட்கள வியாப்பிய வியாபகம் அனைத்துமாய் விளங்கும் மய்யச் சுழினை, உபய ஆக்கச் சுழினை என்பன ஆதியாகச் சுழினையும் பலவகைப்படும் என்பதேயாகும். சுத்த நந்தி நாதமே மணிவாசகப் பெருமானுல் பின் வரும் செய்யுளால் கூறப்பட்டதாகும்.

திருவாசகம்.

இன்பான் மொழிக்கிள்ளா யெங்கள் பெருந்துறைக்கோன்
முன்பான் முழங்கு முரசியம்பாய் – அன்பாற்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை.

(ஷை திருத்தசாங்கம் செ. 8)

வேதம் சிவ சந்நிதானத்தில் ஒலிப்பது என்பதன் உண்மை இதுவே யாம். "பேரின்பத்து ஓங்கும் பருமிக்க நாதப்பறை" என்பதே வாய்மையான சாம கானம்—சாம வேதம். அருளமுதம் எனப்படுவது இதுவே யாம். இவ் அருள முதம் உண்ணும் சகச நிட்டையாளராகிய சீவன் முத்தர் பிரணவ தநுவே அருள் வடிவாய்க் கரைவதாகும். பின் வரும் பிரமாணம் இவ் உண்மையை நன்று விளக்கி வற்புறுத்துகின்றது.

சுத்தசாதகம்.

சகசநிட்டையதுலபித்திடுங்காலைத்
தம்முயற்சியதொன்றுமின்றிச்
சகசமதாகித்தன்னுளமதனிற்
முனின்றிங்கிடைவிடாதூறும்
சுகவருளமுதமதனையேயருந்தித்
தொல்வடிவதுமெள்ளக்கரைந்து
சுகவருள்வடிவாய்ச்சுட்டெலாமருளாய்த்
தோன்றநின்றிடுநின்றபடியே.

(ஷை செ. 63)

(தொடரும்.)

உள்ள சகல ஜீவராசிகளும் ஒன்றோடொன்று சம்பந்தமுள்ளவைகளாய் ஒரே உயிர் இயங்குவனவாய் இருக்கின்றன.

செடிகள் வளர்வதின் ஊக்கத்தையும் அதன் இயல்பைப்பற்றியும் நிரம்பவும் முக்கியமான உண்மைகள் கண்டு பிடிக்கப்படுகின்றன. இவ்வாராய்ச்சிக்குப் பெரிதும் கஷ்டத்தைத் தருவது யாதெனில் — நத்தையின் அதிமந்த கதியினைக் காட்டிலும் செடிகொடிகளின் வளர்ச்சி ஆயிரம் மடங்கு மந்த முடையதா யிருத்தலே யாகும். இக் காரணத்தால் வளர்ச்சி வேகத்தை நமக்குப் பிரத்தியக்ஷ பூர்வமாய்க் காட்டி அதனை அளக்கக்கூடியதும் பல்லாயிரம் மடங்கு பெரியதாய் விளக்கிக் காட்டக் கூடியதுமான பூதக் கண்ணுடியை நிர்மிக்க வேண்டியது அவசியமாயிற்று. நான் நிர்மாணம் செய்திருக்கும் 'மாக்நடிக்க்ரெஸோக்ராப்' 'காந்த பூதக் கண்ணுடி' என்னும் கருவியினால் வஸ்துக்களை ஐந்து கோடி முதல் பத்துக்கோடி மடங்கு பெருக்கிக் காணக் கூடிய தென்பது. மனதாலும் கிரகிக்கக் கூடிய விஷய மன்று. அத்தனை கோடி முறை பெருக்கிக் காணலாமென்பதை நாம் மனதில் மனோராஜ்யஞ் செய்துகொள்ளக்கூட இயலாது. இந்த அற்புத விஷயம் உங்கள் புத்திக் கெட்டும்படி உதாரணரூபமாய்க் கூறுகிறேன் கேளுங்கள். அதாவது எனது கருவியால் பெருக்கிக் காட்டும்போது நத்தையினுடைய வேகம் எவ்விதம் உங்களுக்குப் புலப்படும் என்பதைச் சற்று யோசியுங்கள்! இந்த வேக ஆதிக்கத்துக்கு தற்காலத்திய பீரங்கிகளிலிருந்து புறப்படும் குண்டுகளின் வேகத்தை ஒப்பிட்டாலும் கூட அவ் வேகத்தின் தன்மை நமது அறிவுக்கு கோசரமாகாது. ஏனெனில் தற்காலத்தில் பூலோகத்திலுள்ள மஹா பெரிய பீரங்கியின் குண்டைவிடப் பல்லாயிர மடங்கு அதிகரித்ததாகத் தோற்றும் நத்தையினுடைய வேகம் சூரிய மண்டலத்து உண்மைகளுள் ஒப்பிட்டுப் பார்த்தால் சிறிது கோசரமாகும். இப் பூமியின் நிரகூமத்திய ரேகையில் ஒரு புள்ளியானது மனதால்கூட நினைக்க முடியாத வேகத்துடன் சுழல்கின்றது. நமது கருவியில் காணப்படும் நத்தையானது பூமியைப் பார்த்து ஏளனம் செய்தால் பொருத்தமாகவே இருக்கும். நத்தை பூமியைப் பார்த்து 'என்ன நத்தையைப் போல் ஊர்கின்றாயே' என்று பரிகாசம் செய்தால் நாம் பரிகாசம்செய்தது சரி தான் என்றே சொல்வோம். ஏனெனில் இந்த மந்த கதியான பூமி ஒரு பிரதகூஷிணம் செய்யுங் காலத்துக்குள், நத்தை நானூறு முறை பிரதகூஷணம் செய்து விடும்.

இத்தகை மனதுக்குகூட எட்டுதலில்லாத நுட்பத்தினையும் உணர்ச்சியையுமுடைய கருவிகளின் உதவியினுல் தான் வளர்ச்சியின் ஒழுங்கும் முறையும் கண்டு பிடிக்கப்படலாயின. செடிகளின் வளர்ச்சியை அதிகரிக்கக் கண்டுபிடிக்கப் பட்ட ஊக்கத்தை உண்டு செய்யும் இயல்பின வாகிய மின்சார சக்தி ரஸாயன வஸ்துக்கள் முதலியனவும் இவ்வித கருவிகளின் சகாயத்தினுல் தான் மனிதனுக்குத் தெரியலாயின. இவ்வாறுக நாம் இவ்வுலகத்தின் ஆகாரவகைகளை அதிகரித்துக்கொள்ளுவதற்கு அத்தியாவசியமான வழியைக் கண்டுகொண்டோம். எவ்வளவு பரிமாணம் உபயோகித்தால் அந்த ரஸாயன வஸ்துக்கள் நமக்குப் பயன் படுவதாகும் என்பதைக் கண்டறிதல் முக்கியமானது. ஆபத்தான பரிமாணத்துக்கு மிஞ்சாமல் சில வஸ்துக்களைத் தீவிரமாய் விருத்தியடைதற்கு நிரம்பவும் உதவியாய் இருக்கின்றன.

(தொடரும்).

பிழை திருத்தம்.

வித்தகம் தொகுதி. 2. இல. 10.

பக்கம்.	பிரிவு.	வரி.	பிழை	திருத்தம்.
6	2	18	சிலவித்துவான்	வித்துவான்கள்சிலர்
7	1	32	எனப்படும்	எனப்படும்.

வித்தகம் தொகுதி. 2. இல. 11.

பக்கம்.	பிரிவு.	வரி.	பிழை	திருத்தம்
2	2	41	என்பதும்	என்பது.
4	2	12	மாதா உருக்கொண்டு	மாதருருக் கொண்டு
5	3	22	என்பதும்	என்பது
6	2	8	அப்பர்பெருமான்வடிவம்	அப்பர்பெருமான்
7	1	9	உறைக்கப்பட்டன	உரைக்கப்பட்டன.

Imprimerie "VITTAGAM"— Pondichery.

Le Gerant. R. Nagarattinam